# நிதித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## மானியக் கோரிக்கை எண். 16

2017-2018

**D. ஜெயக்குமார்**
**மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும்**
**நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்**

©
**தமிழ்நாடு அரசு**
**2017**

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | கருவூலக் கணக்குத் துறை | 12 |
| 3. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 33 |
| 4. | கூட்டுறவு தணிக்கைத் துறை | 57 |
| 5. | சிறு சேமிப்புத் துறை | 66 |
| 6. | அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் | 76 |
| 7. | அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை | 85 |

# கொள்கை விளக்கக் குறிப்பு

# மானியக் கோரிக்கை எண் 16

# நிதித் துறை

## 2017-2018 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" -385

அனைத்து நிதி ஆதாரங்களையும் முறையாகத் திரட்டி, அதன்மூலம் அரசின் வருவாயைப் பெருக்கி, அவற்றை உரியவாறு பாதுகாத்து மக்களுக்கான சிறந்த திட்டங்களைத் தீட்டி முறையாகச் செலவு செய்வதுதான் நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

திறமையான பொது நிதி நிர்வாகம் என்பது கசிவு ஏதுமின்றி வரி வசூலிப்பதும், அத்தகைய நிதி ஆதாரங்களை முறையாகப் பயன்படுத்திப் பொதுமக்களின், குறிப்பாக அடித்தட்டு மக்களின் நலன் பேணி, நாட்டினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லவும் வழிவகுக்க வேண்டும்.

எனவே, நிதி ஆதாரங்களைப் பொதுமக்களின் நலன் பேணுவதற்காகச் சிறந்த முறையில் பயன்படுத்தி, பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவித்து, மாநிலம் சமூகப் பொருளாதார வளர்ச்சி பெற்று, வளமை பெறுவதை இந்த அரசு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மாநில அரசின் கருவூலத்தைப் பராமரிக்கும் பொறுப்பு வகிக்கும் நிதித்துறை, பொது நிதியைப் பொறுப்புடனும் திறமையாகவும் கையாண்டு வருகிறது. அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து ஒவ்வொரு ஆண்டும் சட்ட மன்றத்தில் சமர்ப்பிப்பதும், நிதிப் பயன்பாட்டை நெறிமுறைப்படுத்தி செலவுகளைக் கட்டுப்படுத்துவதும் நிதித்துறையின் முக்கியப் பணிகளாகும். வரவுகளையும் செலவுகளையும் சமநிலைப்படுத்தி, கடன் பொறுப்புகள் குறைந்த அளவில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்வதும் இத்துறையின் பொறுப்பாகும்.

2. அவ்வப்போது அரசு அறிவிக்கும் வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களுக்குப் போதிய நிதியொதுக்கம் செய்யப்படுவதை நிதித்துறை உறுதி செய்கிறது. திறமையான நிதி மேலாண்மையின் மூலம், அரசின் சேவைகள் மற்றும் திட்டங்களின் பயன்கள் தொய்வின்றி

மக்களுக்கு முறையாகச் சென்றடைவதையும், அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதையும் உறுதிசெய்து மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இத்துறை வழிவகுத்து வருகிறது.

3. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் ஆகியவை தவிரப் பின்வரும் ஏழு துறைகளும் நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன:-

| | |
|---|---|
| (i) | கருவூலக் கணக்குத் துறை |
| (ii) | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை |
| (iii) | கூட்டுறவு தணிக்கைத் துறை |
| (iv) | சிறு சேமிப்புத் துறை |
| (v) | அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் |
| (vi) | அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை |
| (vii) | ஓய்வூதிய இயக்ககம் |

4. தொடர் எண் (i) முதல் (vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண் 50 “ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களும்” குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB)

5. மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 தமிழக அரசால் செயலாக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை இந்தியாவிலேயே மிகவும் வளமைமிக்க, முன்னேற்றம் அடைந்த, வறுமையில்லா மாநிலமாகவும், இம்மாநில மக்கள் வளர்ச்சியடைந்த சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் துய்த்து இணக்கமான சூழ்நிலையில் வாழ்கின்ற மாநிலமாகவும் உருவாக்க வேண்டும் என்பதே மறைந்த **முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா**

அவர்கள் உருவாக்கிய தொலைநோக்குத் திட்டத்தின் நோக்கமாகும்.

6. இந்த ஆவணம், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், வருமானத்தை அதிகரித்தல், உயர்தரத்திலான உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல் போன்ற பொதுமக்களின் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும், எதிர்பார்க்கப்படும் பலன்களை அடையும் வகையிலும் இதன் இலக்குகள் மற்றும் நோக்கங்கள் மிகவும் கவனமாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு முழுமையான திட்ட ஆவணம் ஆகும். மேலும், மாநிலத்திற்கு நல்ல பயன்தரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய துறைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதன் வாயிலாக எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நலிந்தவர்களின் பாதுகாப்பிற்கு மிகவும் தேவையாக உள்ள, மாநிலத்தின் அமைதி மற்றும் வளர்ச்சியினை அடைவதை ஒரு இலக்காகக் கொண்டு செயல்படும் நோக்கில் இந்த ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-ன் வாயிலாக பின்வரும் பயன்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- 2023-ல், மாநிலத்தின் தனி நபர் வருமானம் (2010 ஆம் ஆண்டு அடிப்படை விலையில்) 10,000 அமெரிக்க டாலர் அளவிற்கு அதிகரித்து உயர் மற்றும் நடுத்தர வருவாய் பெற்ற நாடுகள் அடைந்துள்ள பொருளாதார நிலையை அடைதல்;
- 2023-ல் மாநிலத்தின் மனித வளர்ச்சி குறியீடு, வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் வகையில் உயர் தரத்திலான சமூக வளர்ச்சியை அடைதல்; மற்றும்
- மக்கள் பயன்பாட்டிற்காக, மாநிலம் முழுவதும் உலகத்தர உள்கட்டமைப்பை ஏற்படுத்துதல்.

8. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்ட ஆவணம் 2023 மூன்று பகுதிகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது. பகுதி-1ல் வளர்ச்சி உத்திகள் மற்றும் துறை சார்ந்த முதலீட்டு திட்டங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. பகுதி-2 ல் துறை சார்ந்த திட்டக்குறிப்புகள் குறிப்பாக 217 திட்டங்கள் மற்றும் அவற்றிற்கான செலவினங்கள் அடங்கிய செயல்திட்டங்கள் இடம்பெற்றுள்ளன. பகுதி-3, தொலைநோக்குத் திட்டத்தினை,

தடையின்றி ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவதற்கு, அரசின் அனைத்துத் துறைகள் மற்றும் முகமைகளுக்கான வழிகாட்டும் ஆவணம் ஆகும். இதன்வாயிலாக, 2023 ஆம் ஆண்டில், அனைவருக்கும் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பினை உருவாக்கிட இந்த அரசு உத்தேசித்துள்ளது.

9. பதினைந்து இலட்சம் கோடி ரூபாய் மொத்த முதலீட்டில் மாநிலத்தின் உள்கட்டமைப்புகளை மேம்படுத்தும் நோக்குடன், மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதா அவர்களால் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தின் முதற்பகுதி 22.3.2012 அன்று வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 21.2.2014 அன்று, தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 ஆவணத்தின் இரண்டாவது பகுதி வெளியிடப்பட்டது. துறை வாரியான அணுகுமுறைகளையும், ஆறு முக்கியத் துறைகளில் மேற்கொள்ளப்பட உள்ள 217 உள்கட்டமைப்புத் திட்டங்களைப் பற்றிய விவரங்களையும் இந்த ஆவணம் எடுத்துரைக்கிறது. தொலைநோக்குத் திட்ட ஆவணத்தில்

அடங்கியுள்ள திட்டங்களுக்கான ஆயத்தப்பணிகள் “திட்டத்தயாரிப்பு நிதி” மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்கண்ட 217 தொலைநோக்குத் திட்டங்களில் 2,33,523 கோடி ரூபாய் மதிப்புள்ள 27 திட்டங்கள், இரயில் போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் ஆகிய துறைகளில் மத்திய அரசால் செயல்படுத்தப்பட உள்ளன. எஞ்சியுள்ள 190 திட்டங்கள் தனியார் துறை பங்களிப்பு உட்பட, தமிழ்நாடு அரசு மற்றும் அதன் முகமைகள் மூலமாக செயல்படுத்தப்பட உள்ளன. இந்த 190 திட்டங்களில், 88 திட்டங்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள திட்டங்கள் பல்வேறு தயாரிப்பு நிலைகளில் உள்ளன.

10. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம், 2012-ன் கீழ், அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், நமது மாநிலத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான ஒருங்கிணைப்பு முகமையாகச் செயல்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையின்கீழ் செயல்படும் இந்த வாரியம், தமிழ்நாடு

தொலைநோக்குத் திட்டம் 2023-ன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய, உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான திட்டமிடல், முறைப்படுத்துதல் மற்றும் முறையாகச் செயல்படுத்துதல் போன்ற பணிகளை நிறைவேற்ற உதவுகிறது. மாநிலத்தில் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை இந்த வாரியம் ஒருங்கிணைப்பதோடு பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் அரசு நிறுவனங்கள் செயல்படுத்தும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தவும் உதவுகிறது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் 2012, அதன் விதிகள் 2012 மற்றும் அதன் வரைமுறைகள் 2013 ஆகியவை, திட்டங்களை விரைவாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு தேவையான நிருவாக அதிகாரத்தை வழங்கியுள்ளதோடு தெளிவான நடைமுறைகளையும் நடவடிக்கைக்கான கட்டமைப்புகளையும் வரையறுத்துள்ளன.

11. மாநில நெடுஞ்சாலை-15 (கோபிச்செட்டிபாளையம்-ஈரோடு), மாநில நெடுஞ்சாலை-37 (ஒட்டன்சத்திரம்-தாராபுரம்-அவினாசிபாளையம்) மற்றும் மாநில நெடுஞ்சாலை-39

(திருநெல்வேலி-செங்கோட்டை-கொல்லம்) ஆகிய தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II மூலம் செயல்படுத்தப்படவுள்ள மூன்று திட்டங்களுக்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒப்புதலளித்துள்ளது. மேலும், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், சென்னை மாநகரத்திற்கென ஒரு அறிவுசார் போக்குவரத்து திட்டத்திற்கான (Intelligent Transport System) விரிவான திட்ட அறிக்கையினை இறுதி செய்துள்ளது. மதுரை-தூத்துக்குடி தொழிலகப் பெருவழித் திட்டத்தையும் (Industrial Corridor) தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஒருங்கிணைத்துச் செயல்படுத்தி வருகிறது. மதுரை-தூத்துக்குடி தொழிலகப் பெருவழி மேம்பாட்டுக்கழகம் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு, இத்திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மதுரை-தூத்துக்குடி தொழிலகப் பெருவழிச்சாலை திட்டத்தைக் கிழக்குக் கடற்கரை பொருளாதாரப் பெருவழிச்சாலையின் ஒரு பகுதியாகக் கருதி உதவிட, ஆசிய வளர்ச்சி வங்கி முனைப்பான ஆர்வம் காட்டிவருகிறது. மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சியில் 24 மணி நேரக் குடிநீர்

வழங்கல் திட்டம் மற்றும் மூன்று இடங்களில் பன்னடுக்கு சீருந்து நிறுத்தங்கள் (Multi Level Car Parking) அமைப்பது போன்ற திட்டங்கள் ஒப்பந்தம் கோரும் நிலையில் உள்ளது.

## தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் (TNIFMC)

12. நாட்டிலேயே முதன்முதலாக, ஒரு சிறப்புமிக்க முயற்சியாக, சொத்து பராமரிப்பு மேலாண்மை நிறுவனமாக, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை கழகத்தை மாநில அரசு நிறுவியுள்ளது. இக்கழகம், இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) ஒப்புதலைப் பெற்று, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியம் (TNIF) என்ற மாற்று முதலீட்டு நிதியம் (AIF) வகை-I ஒன்றை நிறுவியுள்ளது. இதன் முதலீட்டு மேலாளரான, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம், இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கரூர் வைஸ்யா வங்கி, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், தேசிய வீட்டு வசதி வங்கி மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளை இதன் பங்கு மூலதனத்தை அளிப்பவர்களாக இணைத்துள்ளது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகம் நிர்வகிக்கும்

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியம் என்ற இந்த நிதியத்திற்கு, தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் ஏற்கனவே முதல் இழப்பை ஈடு செய்யும் ஊக்குவிப்பு மூலதன நிதியாக 30 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இந்த நிதியம், ஏற்கனவே தயார் நிலையிலுள்ள எரிசக்தி, சுற்றுலா மற்றும் நகர்ப்புற உள்கட்டமைப்புத் துறைகளில் உள்ள திட்டங்களில் முதலீடு செய்ய உத்தேசித்துள்ளது. திட்டங்களில் முதலீடு செய்வதற்கு, தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தின் முதலீட்டு குழு ஒப்புதலளிக்கும். உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி அளிப்பதற்கு, 2017-2018 ஆம் நிதியாண்டில் 3,000 கோடி ரூபாய் அளவிற்கு நிதியை திரட்ட தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியமானது திட்டமிட்டுள்ளது.

## கருவூலக் கணக்குத் துறை

13. கருவூலக் கணக்கு ஆணையரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் கருவூலக் கணக்குத் துறை இயங்கி வருகிறது. இத்துறையின் கீழ் இயங்கும் ஆறு மண்டல

இணை இயக்குநர் அலுவலகங்கள், ஆறு சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மூன்று சார் சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 32 மாவட்டக் கருவூலங்கள், ஒரு ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், ஒரு உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்கள் ஆகியவை கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

## மின்-ஆளுமை முயற்சிகள்

### i. தன்னியக்கக் கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை (ATBPS)

14. மாதாந்திரக் கணக்குகள் தயாரித்தல், பட்டியல்கள் கண்டறிதல் மற்றும் பட்டியல்களின் ஏற்பளிப்பினைக் கண்காணித்தல் போன்ற கருவூலச் செயல்பாடுகளில் உள்ள இடர்பாடுகளைக் களையும் பொருட்டு, சம்பளக் கணக்கு அலுவலகங்கள், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார் கருவூலங்களில் தன்னியக்கக் கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தும் பொருட்டுக் கணினி மற்றும் இதர உபகரணங்கள்

வழங்குதல், குறும்பரப்பு வலையமைப்பு (LAN) மற்றும் தமிழ்நாடு அகன்ற வலையமைப்பு வசதிகள் (TNSWAN) ஏற்படுத்தித் தருதல், பணியாளர்களின் பணியிடச் சூழலை மேம்படுத்துவதற்காக அலுவலகங்களை நவீனப்படுத்துதல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டம் வங்கிகள், பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள், மாநிலக் கணக்காயர் ஆகியவர்களுக்கு உதவியாகவும் பயனுள்ள கண்காணிப்பை மேற்கொள்ளவும் உதவுகிறது.

### ii. வலைதளச் சம்பளப் பட்டியல் (Web Payroll)

15. வலைதளச் சம்பளப் பட்டியல் மென்பொருள் பயன்பாடு தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மொத்தம் 23,648 பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால், வலைதளச் சம்பளப்பட்டியல் மென்பொருள் மூலம் அரசுப் பணியாளர்களது சம்பளப் பட்டியல்கள் தயார் செய்யப்படுகின்றன. அரசு ஊழியர்கள் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஒருமித்த தரவுதளத்தின் (Centralized

Database) மூலம் பணியாளர்களின் சம்பளம் மற்றும் அதைச் சார்ந்த பிற விவரங்களையும் பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாள், ஓய்வு பெற்றவர்கள் விவரம், விரைவில் ஓய்வு பெறவுள்ள பணியாளர்களின் விவரங்கள் அவர்களுடைய தர ஊதியத்தின்படியும், பதவியின்படியும் பெறும் வகையில் வலைதளச் சம்பளப் பட்டியல் மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், மனிதவள மேலாண்மைக்கு இத்திட்டம் ஒரு பயனுள்ள கருவியாக அமைந்துள்ளது.

### iii. ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் (IF&HRMS)

16. நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற, நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை இணைத்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தத் திட்ட ஒருங்கிணைப்பாளராக விப்ரோ நிறுவனம் (M/s.WIPRO Limited) தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலம்

முழுவதும் உள்ள 23,648 பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள், இணையத்தின் மூலம் பட்டியலைக் கருவூலத்தில் சமர்ப்பிக்க இயலும். இத்திட்டத்தின் மூலம் வருவாய் மற்றும் செலவு பற்றிய நிகழ்நேர விவரங்களை உடனுக்குடன் பெற இயலும். இதன்மூலம் பொதுமக்கள் தடைகளின்றி உடனடிச் சேவையைப் பெற இயலும். இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசுப் பணியாளர்களின் பணிப்பதிவேடு பராமரிப்பு எளிமையான முறையில் கணினிமயமாக்கப்பட்டுச் சம்பளப்பட்டியல், பதவி உயர்வு, பணி மாறுதல்கள், விடுப்பு மற்றும் இதர விவரங்கள் அவ்வப்போது உடனுக்குடன் பதியப்படும். நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம், எண்ம ஒப்பம் (Digital Signature) மற்றும் விரல்ரேகை பதிவுமுறை (Bio-Metric) மூலம் உறுதிப்படுத்துவது போன்ற பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கியதாகும். இந்தப் புதிய திட்டத்தை, டிசம்பர் 2017 முதல் செயல்படுத்திட வழிவகை செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் நிதிநிலை விவரம் உடனுக்குடன் கிடைப்பதுடன் நிதி

மற்றும் மனிதவள மேலாண்மை நிருவாகம் சிறப்பாக நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

## புதிய ஓய்வூதியத் திட்டம்

17. அரசாணை நிலை எண் 1155, பொது (சிறப்பு-பி) துறை, நாள் 8.12.2011 வாயிலாக 1.1.2004 அன்றும் அதற்குப் பின்னரும் பணியில் சேர்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்குப் புதிய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அலுவலரின் கட்டாயப் பங்களிப்பாக அடிப்படை ஊதியத்தில், (ஊதியம் + தர ஊதியம் + அகவிலை ஊதியம் (ஏதேனும் இருப்பின்) + அகவிலைப்படி) 10 சதவீதம் பிடித்தம் செய்யப்பட்டு, அதற்கு இணையாக அரசு தரப்பிலும் பங்களிப்பு செய்யப்படுகிறது.

## பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

18. கடந்த 1.4.2003 முதல் அரசுப் பணியில் சேர்ந்த அனைத்து அரசு அலுவலர்களுக்காக பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், அரசுப் பணியாளர்களிடமிருந்து அவர்களது அடிப்படை

ஊதியம், தர ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு இவற்றில் 10 சதவீதம் மாதந்தோறும் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. அரசு ஊழியர்களின் பங்குத் தொகைக்கு நிகராக, அரசும் தனது பங்களிப்பு தொகையினை அவர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கில் செலுத்துகிறது. மேலும், பிடித்தம் செய்யப்பட்ட மாதத்திலிருந்து வட்டித்தொகை கணக்கிடப்பட்டு, பங்களிப்பு ஓய்வூதியத்திட்டக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. 2015-2016 ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்குச் சீட்டு (Account Slip) 3,84,702 அரசுப் பணியாளர்களுக்கு இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்குச் சீட்டு (Account Slip) இணையதளத்தில் வெளியிடுவதற்கான பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

19. அரசாணை நிலை எண் 260, நிதி (ஓய்வூதியக் குறை தீர்ப்பு) துறை, நாள் 15.10.2015 வாயிலாக மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு அலுவலராக (State Nodal Officer) கருவூலக் கணக்குத் துறை ஆணையர் அவர்களை அரசு நியமித்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளில் காணப்படும் தவறுகளை சரிசெய்திட, அரசு தகவல் தொகுப்பு விவர மைய ஆணையர் மற்றும் உள்ளாட்சி தணிக்கைத் துறை இயக்குநர் ஆகியோருடன் இணைந்து கருவூலம் மற்றும் கணக்கு ஆணையர் அவர்கள் இத்திட்டத்திற்கான வழி நடத்துனராகவும் செயல்பட வேண்டும் என இவ்வாணையில் உத்தரவிடப்பட்டுள்ளது. பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட முன்னேற்றம் தொடர்பாக உள்ளாட்சித் துறை அலுவலர்களுடன் கருவூலக் கணக்கு ஆணையரால் கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு,

கணக்குச்சீட்டுகள் குறித்த ஆயத்தப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கான மென்பொருள் தேசியத் தகவல் மையத்தால் உருவாக்கப்பட்டு, உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டச் சந்தா பிடித்தம் குறித்த விவரங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்யும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதித்தொகை வழங்குதல்

20. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 19.2.2016 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110-ன்கீழ் அறிவித்தவாறு, பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், பணித் துறப்பு செய்தவர்கள், பணியிலிருக்கும் போது இறந்தவர்கள், பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் ஆகியோர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதித் தொகையை மொத்தமாக வழங்க அரசாணை நிலை எண் 59, நிதி (ஓய்வூதியக் குறை தீர்ப்பு) துறை, நாள் 22.2.2016-ல் ஆணையிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், ஜுன் 2017 வரையிலான காலத்தில் 3,062 பணியாளர்களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியத்

திட்ட இறுதி ஒப்பளிப்பு ஆணை (CPS final authorization) 115.10 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

21. தற்போது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமும், புதிய ஓய்வூதியத் திட்டமும் அரசு தகவல் தொகுப்பு விவர மையம் மற்றும் கருவூலக் கணக்குத் துறையால் தேசியத் தகவல் மையத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிய ஓய்வூதியத் திட்ட முகப்பு எண் (NPS Index Number) மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட முகப்பு எண் (CPS Index Number) அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தால் வழங்கப்பட்டு வருகிறது. 2015-2016 ஆம் ஆண்டிற்கான கணக்குச் சீட்டு (Account Slip) அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கு இணையதளத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன. 2016-2017 ஆம் ஆண்டிற்கான கணக்குச் சீட்டுகள் 12.6.2017 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து கண்காணிக்கும் பணிகள் சம்பந்தப்பட்ட துறைகள்,

சம்பளக் கணக்கு அலுவலகங்கள் மற்றும் மாவட்டக் கருவூல அலுவலகங்களுடன் இணைந்து கருவூலம் மற்றும் கணக்கு துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பணிபுரியும் அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்துவது தொடர்பான ஒப்பந்தங்கள் என்.எஸ்.டி.எல். (National Securities Depository Limited) மற்றும் பி.எப்.ஆர்.டி.ஏ. (Pension Fund Regulatory and Development Authority) ஆகியவற்றுடன் 28.6.2017 அன்று கையொப்பமிடப்பட்டது.

## புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - 2016

22. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, அரசால் 30.6.2016 க்கு பிறகு மேலும் நான்காண்டுகளுக்குச் சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்-2016, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம், சென்னை மூலம் 1.7.2016 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் அரசு ஊழியர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், அரசு

சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக் கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்களின் தகுதிபெற்ற குடும்ப உறுப்பினர்கள் நான்காண்டுகளில் நான்கு இலட்சம் ரூபாய் வரை இம்மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மூலம் சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

23. இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் நோய்களுக்கும், சிகிச்சைகளுக்கும் மருத்துவ சிகிச்சை பெற ஏற்கனவே இருந்த உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது:-

i. புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய் கட்டிகளுக்கான நோய் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள், உள்நோயாளிகளுக்கு நோய் கண்டறியும் நடைமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது

ii. கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை

iii. சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை

iv. விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் எலும்பு முறிவுகள்

v. இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசம் (Aneurysm) மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Angioplasty)

vi. தீக்காயங்களுக்கான சிகிச்சை

24. மேலும், கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்ச வரம்பு ஒரு கண்ணிற்கு 25,000/- ரூபாய் வீதமும், கர்ப்பப்பை நீக்குவதற்கான அறுவை சிகிச்சை உதவியின் உச்ச வரம்பு 45,000/- ரூபாய் ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விபத்தின் காரணமாக மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 113 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் கட்டணமில்லாமல் மேற்கொள்வதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், புதுதில்லி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள

726 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1.7.2016 முதல் 30.6.2020 வரையிலான நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டு கட்டணமாக ஒரு பணியாளருக்கு 2100/- ரூபாய் வீதம் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு அரசு செலுத்தும். இதற்கென பணியாளரிடமிருந்து ஒவ்வொரு மாதமும் 180/- ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஊதியத்திலிருந்து ஜூலை 2016 முதல் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. பிடித்தம் செய்யப்பட்ட தொகையை விடக் கூடுதலாகச் செலுத்தப்படும் காப்பீட்டு கட்டணத் தொகையை, அரசு / அரசு சார்ந்த அமைப்புகள் ஏற்கும். 1.7.2012 முதல் 30.6.2016 வரையிலான நான்காண்டுகளில் 1,85,920 பயனாளிகள் 738.06 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். தொடர்ந்து இத்திட்டத்தின்கீழ் 1.7.2016 முதல் 30.6.2017 வரை 47,857 பயனாளிகள் 187.23 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

## ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014

25. ஓய்வூதியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014, பொதுத்துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம் மூலமாக 1.7.2014 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களும் (வாழ்க்கைத் துணை உள்பட) குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை வசதியினைப் பெறும்பொருட்டு இத்திட்டமானது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் நான்காண்டுகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வரை மருத்துவக் காப்பீட்டு உதவியினைப் பெறலாம். இதற்காக 150 ரூபாய் சந்தா தொகையாக ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களிடமிருந்து அவர்களின் மாதாந்திர ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் பயன்பெறும் பொருட்டு 114 சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் 60 சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள் மற்றும்

54 மருத்துவப் பராமரிப்பு நடைமுறைகளும் அடங்கும். இத்திட்டத்தின்கீழ் தற்போது தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் 724 மருத்துவமனைகள் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1.7.2014 முதல் 30.6.2017 வரை 1,46,981 பயனாளிகள் 424.40 கோடி ரூபாய் அளவிற்கு கட்டணமில்லா மருத்துவ சிகிச்சையினைப் பெற்றுள்ளனர்.

## மாநில அரசு ஓய்வூதியர்களின் எண்ம உயிர்வாழ் சான்றிதழ் 'JEEVAN PRAMAAN PORTAL' மூலம் பெறுதல்

26. ஆண்டுதோறும் சுமார் 6.50 இலட்சம் எண்ணிக்கையிலான ஓய்வூதியர்கள் வருடாந்திர நேர்காணலுக்கு கருவூலங்களுக்கு வருகை புரிகிறார்கள். இந்த வருடாந்திர ஓய்வூதிய நேர்காணல் மூன்று மாதத்திற்குள் (ஏப்ரல், மே, ஜூன்) முடிக்கப்பட வேண்டும். பல ஓய்வூதியர்கள் நீண்ட தொலைவிலிருந்து கருவூலத்திற்கு வருகை புரிகின்றனர். ஓய்வூதியர்களின் இன்னல்களைத் தவிர்க்கும் பொருட்டு

2017-2018 ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியர்கள் தங்களது எண்மம உயிர்வாழ் சான்றிதழை 'Jeevan Pramaan Portal' என்ற தரவுதளத்தின் மூலம் ஆதார் எண்ணை உபயோகித்து தாங்களே புதுப்பித்துக் கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ், 9.7.2017 அன்றுள்ளபடி 1,65,136 ஓய்வூதியர்களும், குடும்ப ஓய்வூதியர்களும் தங்களது உயிர்வாழ் சான்றிதழை சமர்ப்பித்துள்ளனர்.

## புதிய கருவூலங்கள் ஏற்படுத்துதல் / கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

27. சென்னை மாவட்டக் கருவூல அலுவலகத்தைத் தவிர கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் உள்ள அனைத்து மாவட்டக் கருவூல அலுவலகங்களும் அரசு கட்டடத்தில் இயங்கி வந்தன. தற்போது சென்னை மாவட்டக் கருவூலத்திற்குச் சென்னை நந்தனத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலகங்கள் வளாகத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாவட்டக் கருவூலங்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமான கட்டடங்களிலேயே செயல்படும் நிலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

28. “ஒரு வட்டம் - ஒரு சார் கருவூலம்” என்ற அரசின் கொள்கைக்கிணங்கக் கடந்த 2011 முதல் 2016 வரையிலான ஐந்து ஆண்டுகளில் 37 புதிய சார் கருவூலங்கள் உருவாக்கப்பட்டு மொத்தம் 243 சார் கருவூலங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன.

29. மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் பழைய மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த 67 சார் கருவூலங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான அரசாணை வழங்கப்பட்டு அவற்றில் 37 சார் கருவூலங்களின் கட்டடப் பணிகள் முடிவுற்றுப் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஆறு சார் கருவூலங்களுக்கான கட்டடப் பணிகள் முடிவடைந்துள்ளன. 21 சார் கருவூலங்களுக்கான கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மூன்று சார் கருவூலங்களுக்கான நிலம் கண்டறியும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

30. நிதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பின்வரும் 11 அலுவலகங்களுக்குப் புதிய ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலகங்கள் வளாகம் அரசால் 36.33 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

- கருவூலக் கணக்கு ஆணையரகம்
- மண்டல இணை இயக்குநர் அலுவலகம் (சென்னை மண்டலம்)
- சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு)
- மாவட்டக் கருவூலம், சென்னை
- ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம்
- உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம்
- ஓய்வூதிய இயக்ககம்
- உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககம்
- தலைமை அரசுத்துறை நிறுவனத் தணிக்கையர் அலுவலகம்
- கூட்டுறவு தணிக்கை இயக்குநரகம் மற்றும்

- கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், சென்னை மண்டல அலுவலகம்

இந்தப் புதிய ஒருங்கிணைந்த நிதித்துறை அலுவலக வளாகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 4.3.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது.



27.04.2017 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.D.ஜெயக்குமார் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குத் துறை, உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை மற்றும் ஒய்வூதியத் துறை தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., கருவூலக் கணக்குத் துறை முதன்மைச் செயலாளர்/ஆணையர், திரு.தென்காசி S ஜவஹர், இ.ஆ.ப., நிதித்துறை செயலாளர் ( செலவினம்) திரு.P.செந்தில்குமார், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

31. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அரசாணை எண் 125, நிதித்துறை, நாள் 10.2.1921 ன்படி தோற்றுவிக்கப்பட்டது. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனை குழுக்கள், நூலக ஆணைக்குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின்கீழ் சட்டப்படி தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும். இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம், 2014 நிறைவேற்றப்பட்டு 14.12.2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 24.8.2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

32. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம், 2014-ன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள்

மற்றும் இதர நிறுவனங்களின் தணிக்கை அச்சட்டத்தின் பிரிவு 5-ன்படியும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படியும் மேற்கொள்ளப்படும். உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் மேற்கொள்ளப்படும் தணிக்கைக்கு இச்சட்டம் சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்குகிறது. இதன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளின் ஆண்டுத் தணிக்கை அறிக்கையினை மத்திய தலைமை கணக்குத் தணிக்கைத் தலைவரின் அறிக்கையுடன் சேர்த்துச் சட்டசபையில் சமர்ப்பிக்கவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

33. சென்னை, மாநில கணக்காயரின் அறிவுரையின் அடிப்படையில் சட்டசபையில் தணிக்கை அறிக்கையினைச் சமர்ப்பிக்க ஏதுவாகத் தணிக்கைத் துறை அலுவலர்களுக்குத் தேவையான பயிற்சி அளிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கை வடிவத்தை மாற்றி அமைக்கவும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள், 2016-ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

34. இன்றைய நாளில் பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

| வ.எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 12 |
| 2 | நகராட்சிகள் | 124 |
| 3 | பேரூராட்சிகள் | 528 |
| 4 | மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 6 | பல்கலைக்கழகங்கள் | 23 |
| 7 | உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள் | 32 |
| 8 | வேளாண்மை விற்பனைக் குழுக்கள் | 26 |
| 9 | தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் | 1 |
| 10 | வேளாண் விற்பனைக் கழகப் பொறியியல் பிரிவு | 2 |
| 11 | கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி | 1 |
| 12 | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 27 |
| 13 | கிராம ஊராட்சிகள் (22%) | 2801 |
| 14 | பல்வகை நிறுவனங்கள் | 11 |
| 15 | தேசிய சமூக நலத் திட்டம் | 29 |
| | மொத்தம் | 4033 |

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்

### i. உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை

35. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளை சரிபார்த்தல், வரவு-செலவுகள் முறையாக உள்ளனவா என சரிபார்த்தல், மேற்படி வரவு செலவுகள் சட்டத்திற்குட்பட்டும் விதிகளின்படியும் அரசாணைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அவ்வமைப்புகளின் செயல்பாட்டின் உண்மை நிலையை பிரதிபலிக்கின்றனவா எனவும் சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் அவை சமுதாய நலனுக்குப்

பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கைகள் உறுதி செய்கின்றன.

## ii. கிராம ஊராட்சி அமைப்புகளின் சோதனை தணிக்கை

36. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 22 சதவிகிதம் சோதனை தணிக்கையாக இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு தணிக்கை செய்யப்படும் ஊராட்சிகளின் எண்ணிக்கை 2,801 ஆகும்.

## iii. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உடன் நிகழ் தணிக்கை (Concurrent Audit)

37. தற்போது 12 மாநகராட்சிகளிலும், 17 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக்கழகங்களிலும் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டு முதல், 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உடன் நிகழ் தணிக்கை முறையை அரசு

அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் / ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

### iv. மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை (Immediate Post Audit) முறை செயல்படுத்துதல்

38. உடன் நிகழ் தணிக்கை செயல்படுகின்ற கீழ்க்கண்ட 12 மாநகராட்சிகளிலும் 17 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் அச்செலவு சீட்டுகள் உடனடியாக தணிக்கைக்கு வழங்கப்பட்டு, உடனுக்குடன் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் நிர்வாகத்திற்குத் தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

| வ. எண். | மாநகராட்சிகள் (உடன் நிகழ் தணிக்கை) | நகராட்சிகள் (உடன் நிகழ் தணிக்கை) |
|---|---|---|
| 1 | சென்னை | ஆவடி |
| 2 | சேலம் | காஞ்சிபுரம் |
| 3 | கோயம்புத்தூர் | கடலூர் |
| 4 | திருச்சி | கரூர் |
| 5 | மதுரை | கும்பகோணம் |
| 6 | திருநெல்வேலி | புதுக்கோட்டை |
| 7 | தூத்துக்குடி | பழனி |
| 8 | வேலூர் | பொள்ளாச்சி |
| 9 | திருப்பூர் | ஊட்டி |
| 10 | ஈரோடு | நாகர்கோவில் |
| 11 | தஞ்சாவூர் | மறைமலைநகர் |
| 12 | திண்டுக்கல் | தாம்பரம் |
| 13 | - | பல்லாவரம் |
| 14 | - | திருவண்ணாமலை |
| 15 | - | கொடைக்கானல் |
| 16 | - | இராஜபாளையம் |
| 17 | - | கோவில்பட்டி |

39. உடன் நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்தத் தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகள் மற்றும் வரவு, செலவுகள் குறித்த பத்திகளை உள்ளடக்கியதாகத் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

## v. உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் தணிக்கை

40. உடன் நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 107 நகராட்சிகள், ஒன்பது பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், நூலக ஆணைக்குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும்

மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டு கணக்குகள் பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இயல்புநிலைக் கணக்கு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையைச் செயற்படுத்துதல்

41. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இயல்புநிலை கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual based Accounting System) 1999-2000 மற்றும் 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்துப் பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கு முறை செயல்படுத்தப்பட்டது. கடந்த 2015-2016 முதல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் ஏழு இலக்கங்களைக் கொண்ட தேசிய அளவிலான நகராட்சிகளின் கணக்கு நடைமுறை சார்ந்த கணக்கீடு முறை படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

42. ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ள உதவும் இருப்புநிலை குறிப்புகளையும் (Balance Sheet) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி தயாரித்துக் கணக்குகள் பேணுவதே இந்தக் கணக்கு முறையின் இலக்கு மற்றும் நோக்கமாகும்.

43. இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அவற்றின் உடைமைகளை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்து பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மேம்படுத்தப்பட்ட கணக்கு முறைகளை செயல்படுத்தியிருப்பதால், மூலதனத் திட்டங்களுக்கும் நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குதல்:

44. உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டு கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும், தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அர்த்தமற்றது என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். இதன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஆண்டு கணக்குகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அலுவலர்களால் தணிக்கை செய்யப்பட்டுச் சான்றளிக்கப்படுகின்றன.

45. பல்கலைக்கழக மானியக்குழு, மாநில / மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால், பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிகளை, பயன்படுத்தியதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

## தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை

46. தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின் போது கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர காலமுறை அறிக்கை மூலம் அரசு செயலாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளின் தலைவர்களுக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தெரியப்படுத்தப்படுகின்றன.

47. தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிர்வாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின்

மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கை மறுப்புரைகளுக்கு உடனடித் தீர்வு காணப்படுகிறது.

48. தணிக்கையின் போது தொடக்க நிலை மற்றும் இறுதி நிலை விவாதமுறை பின்பற்றப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

## மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

49. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலை குழுக்களும், ஊரக வளர்ச்சி ஆணையரை தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலை குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை 39 மாவட்ட அளவிலான உயர்நிலை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 469 தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டது.

50. பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும்,

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை மாவட்ட அளவிலான எட்டு உயர்நிலை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 418 தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டது.

51. அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு, மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர்நிலை குழு, நகராட்சி நிர்வாக இயக்குநரை தலைவராகக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை மாவட்ட அளவிலான 34 உயர்நிலை குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 11,325 தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டது.

## சிறப்புப் பணிகள்

52. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### i. உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் அனுமதித்தல் / வழங்குதல்:

53. நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்குச் சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31.5.2017 அன்றைய நிலவரப்படி 31,208 ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வுத் தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### ii. உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்

54. உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களை காலதாமதம் இன்றி பெற்று கொள்வதற்காக உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

### iii. நகராட்சி ஓய்வூதியதாரர்கள் மருத்துவ நலத்திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்

55. அரசு ஓய்வூதியதாரர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம், அரசாணை (நிலை) எண் 120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.5.1999-ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1.8.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களின்கீழ், ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை கோரிக்கைகள் ஏற்கப்பட்டுத் தொகை அனுமதிக்கப்பட்ட இனங்களின் விவரங்கள் பின்வருமாறு.

| | மருத்துவ நலத் திட்டம் | | குடும்பப் பாதுகாப்புத் திட்டம் | |
|---|---|---|---|---|
| மாதம் | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை | 277 | 92.98 | 101 | 43.55 |

## iv. ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்

56. அரசு ஓய்வூதியதாரர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (நிலை) எண் 23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7) துறை, நாள் 15.3.2013-ன்படி, ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 1.4.2013 முதல்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின்கீழ், ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை கோரிக்கைகள் ஏற்கப்பட்டு தொகை அனுமதிக்கப்பட்ட இனங்களின் விவரங்கள் பின்வருமாறு.

| மருத்துவ நலத் திட்டம் | | | குடும்பப் பாதுகாப்புத் திட்டம் | |
|---|---|---|---|---|
| மாதம் | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை | 200 | 40.82 | 104 | 36.40 |

## v. உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

57. உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும்

அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அவர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டில் 20 கோடி ரூபாய் அளவிற்குத் தொகை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், மேற்காணும் ஒதுக்கீட்டு தொகை முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

### vi. அறக்கட்டளைகளின் பொருளாளர்

58. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 1.4.1952 முதல் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

59. இந்த அறக்கட்டளை நிதிக்கான வட்டித் தொகை, தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவர்களிடமிருந்து வரும்

கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 15.65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நான்கு மத்திய அரசு அறக்கட்டளைகளும், 24.80 கோடி ரூபாய் மதிப்புள்ள 875 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை அறக்கட்டளை நிதிகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வட்டி வரவுகளிலிருந்து 209 அறக்கட்டளை நிறுவனங்களுக்கு உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்கப்படுவதற்காக 28.23 இலட்சம் ரூபாய் வட்டித் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. செயல்படாத அறக்கட்டளைகளை நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை

60. அரசாணை (நிலை) எண் 260, நிதி (ஓய்வூதியக் குறை தீர்ப்பு) துறை, நாள் 15.10.2015-ன்படி, உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், உள்ளாட்சி அமைப்புப்

பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்குகள் சரியான முறையில் பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய தொடர்ந்து தணிக்கை மேற்கொள்ள வேண்டும். 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் பணியாளர்களுக்கான கணக்குச் சீட்டு (Account slip) 2015-2016 ஆம் ஆண்டு முடிய ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இதர உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி அமைப்புகளால் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் அதன் உண்மைத் தன்மை சரிபார்க்கப்பட்டு, தணிக்கைத் துறையினரால் உடனுக்குடன் சான்றளிக்கப்படுகிறது.

## மின் ஆளுமை முயற்சிகள்

61. எளிய மற்றும் வெளிப்படையான முறையில் மின்னணு மூலம் 31,388 உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு மென்பொருளை உருவாக்க 24.80 இலட்சம் ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு தற்போது இப்பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

62. தணிக்கை தொடர்பான திட்டமிடுதல், அட்டவணைப்படுத்துதல் மற்றும் தணிக்கை அறிக்கை தயார் செய்தல் ஆகிய முழுமையான செயல்பாடுகளை மேலாண்மை செய்ய தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு வழிவகை செய்கிறது. இதற்கான செலவினமாக 248.16 இலட்சம் ரூபாய் முன்மொழியப்பட்டு, கூட்டுறவு தணிக்கை மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆகிய இரு துறைகளுக்கும் 200 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் துறையாக கூட்டுறவு தணிக்கைத் துறை நியமிக்கப்பட்டுள்ளது. மென்பொருள் உருவாக்கும் பணி தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

63. உள்ளாட்சி அமைப்புகளான மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நிலுவையில் உள்ள தணிக்கைப் பத்திகள் கணினியின் மூலம் வகைப்படுத்தப்பட வேண்டும் என்ற அரசின் அறிவுரையின்படி வகைப்படுத்தப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளின் தணிக்கைப் பத்திகளைக் கணினிமயமாக்கும் பணி விரைவில் முடிக்கப்பட உள்ளது.

## உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கை நிலை

64. கடந்த 2014-2015 ஆம் ஆண்டுக்கான ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், 22 சதவீதம் கிராம ஊராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் தணிக்கை முடிவுற்றுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டுக்கான ஊராட்சி ஒன்றியங்கள், 22 சதவீதம் கிராம ஊராட்சிகள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தணிக்கை முடிவுற்றுள்ளது. மாநகராட்சிகள், நகராட்சிகள், மற்றும் பேரூராட்சிகளின் 2015-2016 ஆம் ஆண்டுக்கான தணிக்கை 31.7.2017-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 2015-2016 ஆம் ஆண்டுக்கான அனைத்து நிறுவனங்களின் தணிக்கையை ஜூலை 2017-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை நிலை

65. அண்ணா பல்கலைக்கழகம் தவிர ஏனைய 22 பல்கலைக்கழகங்கள் மற்றும் விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலகக் குழுமங்கள் போன்ற அமைப்புகளின்

2014-2015 ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. 2015-2016 ஆம் ஆண்டுக்கான எட்டுப் பல்கலைக்கழகங்களின் தணிக்கை முடிவடைந்துவிட்டது. மீதமுள்ள 15 பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய பல்வகை நிறுவனங்களின் தணிக்கை 31.7.2017-க்குள் முடிக்கப்படும்.

## தணிக்கைக் கட்டணம்

66. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50 சதவீதம் தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனை குழுக்கள் தணிக்கைக்கு மொத்தச் செலவினத்தில் இரண்டு சதவீதம் தணிக்கைக் கட்டணமாகவும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரை 639.86 இலட்சம் ரூபாய் தணிக்கைக் கட்டணமாகப் பெறப்பட்டுள்ளது.

## தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

67. நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் சார்பான தணிக்கைத் தடைகளை நீக்கும் பொருட்டு ஏப்ரல் 2016 முதல் மே 2017 வரையிலான காலத்தில் 208.72 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவு தணிக்கைத் துறை

68. சந்தானம் குழு மற்றும் நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரைகளின்படி கூட்டுறவு தணிக்கைத் துறையானது 17.6.1981 முதல் தனித் துறையாகச் செயல்பட்டு வருகிறது. 1983 ஆம் ஆண்டின் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 80 வது பிரிவின்படி பன்மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து 14 நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

69. கீழ்க்காணும் துறைகளின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டவையாகும்:-

**(31.5.2017 அன்று உள்ளபடி)**

| வ. எண். | நிருவாகப் பதிவாளரின் பெயர் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| i. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 8649 |
| ii. | கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் | 1401 |
| iii. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 312 |
| iv. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 919 |
| v. | தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் | |
| vi. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 865 |
| vii. | மீன் வளத் துறை இயக்குநர் | 1331 |
| viii. | கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப்பணிகள் இயக்குநர் | 117 |
| ix. | சர்க்கரைத் துறை ஆணையர் | 17 |
| x. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 82 |
| xi. | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் | 122 |
| xii. | பட்டுப்புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | 25 |
| xiii. | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர் | 122 |
| xiv. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர் | 55 |
| | மொத்தம் | 14017 |

## கூட்டுறவு தணிக்கைத் துறையின் நோக்கம்

70. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல் மற்றும் அச்சங்கங்களின் இருப்பு நிலை குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாகத் தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துதல் போன்றவை கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணிகளாக உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள், அதற்கான சட்டம், விதி, நடைமுறைகள் ஆகியவற்றின்படி செயல்படுவதைக் கண்காணிக்கச் சங்க உறுப்பினர்களுக்குக் கூட்டுறவு தணிக்கை உதவியாக இருந்து வருகிறது. மேலும் அரசின் நிதியுதவி எதன்பொருட்டு வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

## நகர வங்கிகள் மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன் நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்

71. முனைவர் வைத்தியநாதன் குழுவின் அறிக்கையைச் செயல்படுத்திய பின்னர், 2009 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரையின்படி 25 கோடி ரூபாய்க்கு மேல் வைப்பீட்டு தொகைகளைக் கொண்டுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளின் சட்டப்பூர்வமான தணிக்கைகள் பட்டயக் கணக்கர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## சட்டப் பூர்வத் தணிக்கை

72. சிறிய அளவிலான தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, தொடர் தணிக்கை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. அத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 45 நாட்களுக்குள் முடிக்கப்பெற வேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கெனத்

தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. 1.4.2016 முதல் 31.3.2017 முடிய 3.14 கோடி ரூபாய் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது. 1.4.2017 முதல் 30.6.2017 முடிய 74.31 இலட்சம் ரூபாய் தணிக்கை கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது.

73. அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணம் அடிப்படை விதி 127-ன் கீழ் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விதிக்கப்படுகிறது. அடிப்படை விதி 127-ன் கீழ், 1.4.2016 முதல் 31.3.2017 முடிய 10.25 கோடி ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் 1.4.2017 முதல் 30.6.2017 முடிய 2.77 கோடி ரூபாய் அடிப்படை விதி கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

74. கடந்த ஐந்தாண்டுகளில் தணிக்கை முன்னேற்ற விவரம் பின்வருமாறு:-

(30.6.2017 வரை)

| **வ.எண்** | **வருடம்** | **நிலுவை சங்கங்கள்** |
|---|---|---|
| 1 | 2011-2012 | 512 |
| 2 | 2012-2013 | 617 |
| 3 | 2013-2014 | 723 |
| 4 | 2014-2015 | 842 |
| 5 | 2015-2016 | 1130 |

75. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் ஏப்ரல் முதல் மார்ச் வரையிலான நிதியாண்டிற்கு உரியதால், அந்நிதியாண்டு முடிந்த பின்னரே தணிக்கை துவங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 2015-2016-ஆம் ஆண்டிற்கு 14,017 மொத்தச் சங்கங்களில் 1.4.2016 முதல் 30.6.2017 வரையிலான காலத்தில் 12,887 கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,130 கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையானது 31.8.2017 க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

## சிறப்பு அறிக்கைகள்

76. தணிக்கையில் கடுங்குறைகள் காணும்போது, அது தொடர்பான அனைத்து விவரங்களும் சிறப்பு அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உடன் தெரிவிக்கப்படுகிறது. 1.4.2016 முதல் 30.6.2017 முடிய உள்ள காலத்திற்கு 47.95 கோடி ரூபாய் அளவிலான 411 சிறப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## மின் ஆளுமை மூலம் தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு

77. தணிக்கை தகவல் மேலாண்மை அமைப்பு திட்டத்தினைக் கூட்டுறவு தணிக்கைத் துறை மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் செயல்படுத்திட அரசு கொள்கை அளவில் முடிவெடுத்து 2015-2016 மற்றும் 2016-2017 நிதியாண்டுகளில் தலா 100 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. ஒப்பளிப்பு செய்யப்பட்ட 200 இலட்சம் ரூபாயில் கூட்டுறவு தணிக்கைத் துறைக்கும் உள்ளாட்சி நிதித் தணிக்கை

துறைக்கும் 182 இலட்சம் ரூபாயில் மென்பொருள் வடிவமைப்பு மற்றும் உருவாக்கம், 325 மடிக்கணினிகள் கொள்முதல் செய்தல் மற்றும் திட்டச் செயலாக்க உதவி ஆகியவற்றிற்குத் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (ELCOT) வழியாகச் செலவு செய்யப்பட்டுள்ளது. இதனால் இரண்டு துறைகளில் உள்ள கட்டுப்பாட்டு அலுவலர்களும் கணினி வழியாகவே தணிக்கை தொடர்பான தகவல்களைப் பெறவும், தணிக்கை முன்னேற்றம் குறித்துக் கண்காணிக்கவும் ஏதுவாக இருக்கும். தேவையான மென்பொருள் உருவாக்கப்பட்டு இத்திட்டம் இந்நிதியாண்டில் செயலாக்கப்பட உள்ளது.

## தணிக்கையாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி

78. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் ஆகியவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான பயிற்சிகளும், புத்தாக்கப் பயிற்சிகளும் வருடந்தோறும் அளிக்கப்பட்டு வருகிறது.




**21.04.2017** அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.D.ஜெயக்குமார் அவர்கள் தலைமையில், கூட்டுறவுத் தணிக்கைத் துறைக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சிறு சேமிப்புத் துறை

79. சிறுசேமிப்பு, பொதுமக்களிடம் உபரியாக உள்ள பணத்தினைச் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதற்கு ஒரு முக்கியக் கருவியாக விளங்குகிறது. இத்திட்டங்கள் அதிகப் பாதுகாப்பானதாகவும், கணிசமான வட்டியுடன் திரும்பக் கிடைக்கக் கூடியதாகவும் உள்ளன. மத்திய அரசின் நிதி அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டு அஞ்சலகங்கள் மூலமாக இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மாநில சிறுசேமிப்புத் துறையால் திரட்டப்படும் சிறுசேமிப்பு முதலீடுகளின் நிகரத்தொகை வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விகிதாச்சாரத்தில் அந்தந்த மாநிலத்திற்கு நீண்டகாலக் கடனாக மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்தது. பதினான்காம் நிதிக்குழு, சிறுசேமிப்புக் கடன்களைப் பெறுவதிலிருந்து மாநிலங்களுக்கு விலக்கு அளிக்கப் பரிந்துரைத்ததன் அடிப்படையில், தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, தமிழக அரசுக்குச் சிறுசேமிப்புக் கடன் பெறுவதிலிருந்து 1.4.2016 முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## சிறுசேமிப்புத் திட்டங்கள்

80. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. மத்திய அரசு, 1.4.2017 முதல் சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்களை கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்துள்ளது:-

| வ. எண் | திட்ட விவரம் | 1.4.2016 முதல் 30.9.2016 முடிய வட்டி விகிதங்கள் % | 1.10.2016 முதல் 31.3.2017 முடிய வட்டி விகிதங்கள் % | 1.4.2017 முதல் 30.6.2017 முடிய வட்டி விகிதங்கள் % |
|---|---|---|---|---|
| 1 | அஞ்சலகச் சேமிப்பு கணக்கு (POSA) | 4.0 | 4.0 | 4.0 |
| 2 | கால வைப்பீடு | | | |
| | 1 ஆண்டு அஞ்சலகக் கால வைப்பு நிதி (POTD) | 7.1 | 7.0 | 6.9 |
| | 2 ஆண்டு அஞ்சலகக் கால வைப்பு நிதி (POTD) | 7.2 | 7.1 | 7.0 |

| வ. எண் | திட்ட விவரம் | 1.4.2016 முதல் 30.9.2016 முடிய வட்டி விகிதங்கள் % | 1.10.2016 முதல் 31.3.2017 முடிய வட்டி விகிதங்கள் % | 1.4.2017 முதல் 30.6.2017 முடிய வட்டி விகிதங்கள் % |
|---|---|---|---|---|
| | 3 ஆண்டு அஞ்சலகக் கால வைப்பு நிதி (POTD) | 7.4 | 7.3 | 7.2 |
| | 5 ஆண்டு அஞ்சலகக் கால வைப்பு நிதி (POTD) | 7.9 | 7.8 | 7.7 |
| 3 | அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம் (PORD- 5 ஆண்டுகள்) | 7.4 | 7.3 | 7.2 |
| 4 | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் ( SCSS -5 ஆண்டுகள்) | 8.6 | 8.5 | 8.4 |
| 5 | அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம் (POMIS) | 7.8 (5 ஆண்டுகள்) | 7.7 (5 ஆண்டுகள்) | 7.7 (5 ஆண்டுகள்) |
| 6 | தேசிய சேமிப்புப் பத்திரம் NSC-VIII வது வெளியீடு | 8.1 (5 ஆண்டுகள்) | 8.0 (5 ஆண்டுகள்) | 7.9 (5 ஆண்டுகள்) |

| வ. எண் | திட்ட விவரம் | 1.4.2016 முதல் 30.9.2016 முடிய வட்டி விகிதங்கள் % | 1.10.2016 முதல் 31.3.2017 முடிய வட்டி விகிதங்கள் % | 1.4.2017 முதல் 30.6.2017 முடிய வட்டி விகிதங்கள் % |
|---|---|---|---|---|
| 7 | பொது வருங்கால வைப்பு நிதித்திட்டம் / பொன் மகன் பொது வைப்பு நிதி (PPF - 15 ஆண்டுகள்) | 8.1 (ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1.5 இலட்சம்) | 8.0 (ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1.5 இலட்சம்) | 7.9 (ஒரு நிதியாண்டிற்கு அதிகபட்ச முதலீடு ரூ.1.5 இலட்சம்) |
| 8 | கிஸான் விகாஸ் பத்திரம் (KVP) | 7.8 (110 மாதங்களில் திட்டம் முதிர்வடையும்) | 7.7 (112 மாதங்களில் திட்டம் முதிர்வடையும்) | 7.6 (113 மாதங்களில் திட்டம் முதிர்வடையும்) |
| 9 | சுகன்யா சம்ரிதி கணக்கு வைப்புத் திட்டம் (செல்வ மகள் சேமிப்புத் திட்டம்) | 8.6 | 8.5 | 8.4 |

## செல்வ மகள் சேமிப்புத்திட்டம்

81. மத்திய அரசு, செல்வ மகள் சேமிப்புத் திட்டம் என்ற சேமிப்புத் திட்டத்தை குறிப்பாக, பெண் குழந்தைகளுக்காக 3.12.2014 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கான

வட்டி விகிதம் 1.4.2017 முதல் 8.4 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 10 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டுக்கு 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம்.

## பொன்மகன் பொது வைப்பு நிதி

82. பெண் குழந்தைகளுக்கான செல்வமகள் சேமிப்புத் திட்டத்திற்குக் கிடைத்த வரவேற்பை அடுத்து ஆண் குழந்தைகள் பயன் பெறும் வகையில் மத்திய அரசின் "பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்" 4.9.2015 முதல் இந்திய அஞ்சல் துறை மூலம் "பொன்மகன் பொது வைப்பு நிதி" எனப் பெயரிடப்பட்டு மறுபடியும் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமும், 10 வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவும் ஓர் ஆண்டில் 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்யலாம்.

இத்திட்டத்திற்கு 1.4.2017 முதல் வட்டி விகிதம் 7.9 சதவீதமாக உள்ளது.

## மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்

83. கடந்த 1.4.2017 முதல் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்திற்கு வழங்கப்படும் வட்டி விகிதம் 8.4 சதவீதமாகும். இத்திட்டத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வட்டி வழங்கப்படும் மற்றும் கணக்கினை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்க வசதி உண்டு. ஓராண்டிற்குப் பிறகு கணக்கினை முடிக்கும் பொழுது 1.5 சதவீதமும், இரண்டு ஆண்டிற்குப் பிறகு முடிக்கப்படும் கணக்கிற்கு ஒரு சதவீதமும் முதலீட்டு தொகையில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.

## சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்:

84. 2013-2014 முதல் 2017-2018 (மே 2017 வரை) வரையிலான நிதி ஆண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாகத் தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி வசூல் விவரங்கள் வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | ஆண்டு | மொத்த வசூல் | நிகர வசூல் |
|---|---|---|---|
| 1 | 2013-2014 | 9624.19 | -730.78* |
| 2 | 2014-2015 | 10936.37 | -1084.12* |
| 3 | 2015-2016 | 17259.82 | 1945.41 |
| 4 | 2016-2017 | 20737.29 | 3510.10 |
| 5 | 2017-2018 (மே 2017 வரை) | 4469.76 | 1553.69 |

(*2013-2014 மற்றும் 2014-2015 ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட தொகையைவிட திரும்பப் பெறப்பட்ட தொகை அதிகம் என்பதால் நிகர வசூல் எதிர்மறையாக உள்ளது)

85. தமிழகமெங்கும் சிறுசேமிப்புத் திட்டங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முகவர்கள் மற்றும் முதலீட்டாளர்களின் நலனைப் பேணுவதிலும் சிறுசேமிப்பு ஆணையரகம் முக்கியப் பங்கு வகிக்கிறது. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்களும் சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் சிறுசேமிப்புத் திட்டங்களைப் பொது மக்களிடையே கொண்டு செல்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.

## முகவரமைப்பு மற்றும் முகவர்களுக்கான மத்திய அரசின் தரகுத்தொகை மற்றும் மாநில அரசின் ஊக்கத்தொகை

86. சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்காக மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தற்பொழுது தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 31,115 முகவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக 1.12.2011 முதல் அவர்களுக்கு கீழ்க்காணும் வீதங்களில் மத்திய அரசு தரகுத் தொகை வழங்குகிறது:-

| வ.எண் | முகவரமைப்பு வகை | சிறுசேமிப்புத் திட்டம் | சிறுசேமிப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை | மத்திய அரசின் ஆணைப்படி தரகுத் தொகை 1.12.2011 முதல் |
|---|---|---|---|---|
| அ. | நிலைப்-படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசியச் சேமிப்பு பத்திரம், அஞ்சலக குறித்த கால வைப்பு திட்டம் (1,2,3 மற்றும் 5 ஆண்டுகள்) | 8790 | 0.5% |
| | | கிசான் விகாஸ் பத்திரம் (19.11.2014 முதல் இந்திய அரசால் மீண்டும் அறிமுகப் படுத்தப்பட்டது) | | (15.7.2015 லிருந்து 0.5% லிருந்து 1% ஆக உயர்த்தப் பட்டுள்ளது) |
| ஆ. | மகளிர் முகவர் திட்டம் (MPKBY) | அஞ்சலகத் தொடர் சேமிப்புத் திட்டம் | 21,699 | 4% |
| இ. | அனுமதி அளிக்கப்பட்ட முகவர்களின் பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் (பொன்மகன் பொது வைப்பு நிதி (PPF)) | பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் | 626 | -- |

| வ.எண் | முகவரமைப்பு வகை | சிறுசேமிப்புத் திட்டம் | சிறுசேமிப்பு முகவர்களின் மொத்த எண்ணிக்கை | மத்திய அரசின் ஆணைப்படி தரகுத் தொகை 1.12.2011 முதல் |
|---|---|---|---|---|
| ஈ. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | -- | -- |
| மொத்தம் | | | 31,115 | |

87. மேற்கண்டவற்றில் மகளிர் முகவர் திட்டத்தின்கீழ் மட்டும் அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து, மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## விளம்பரம்

88. அரசு நடத்தும் பொருட்காட்சிகளில் சிறுசேமிப்பு அரங்கு அமைத்து, பொதுமக்களுக்குத் துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. அதே போல மாவட்டங்களில் வட்டார அளவில் நாடகங்கள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

## வெகுமதிகள்

89. சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் முகவர்கள் (MPKBY), மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிறந்து விளங்கும் சம்பளப்பட்டியல் சேமிப்பு திட்டக் குழு தலைவர்கள் (PRSS), நிலை முகவர்கள் (SAS) ஆகியோருக்கு ஒவ்வொரு ஆண்டும் வெகுமதிகள் வழங்கப்படுகிறது.

# அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

90. நிதி தொடர்பான தகவல்களை மிகவும் அர்த்தமுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் செயலாக்க உபகரணங்கள் மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு செலவினைத் திட்டமிடும் நோக்குடன், 1971 ஆம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த

மின்னணு தகவல் செயலாக்க உபகரணங்களைப் பயன்படுத்தி, அரசு துறைகளின் பலதரப்பட்ட செயல்பாட்டு தேவைகளைத் தொகுக்கும் வகையில், அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிகளுக்காக 1975 ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது இந்த மையம் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

(i) புதிய ஓய்வூதியத் திட்டம்

(ii) பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்

(iii) பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதி கணக்குச் சீட்டுகள் வழங்குதல்

(iv) உள்ளாட்சி துறை பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

(v) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி

## புதிய ஓய்வூதியத் திட்டம்

91. 1.1.2004-ற்குப் பிறகு பணியில் சேர்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்குப் புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கான புதிய எண்கள் இது நாள் வரை 164 அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 127 அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கு, 2015-2016 ஆம் ஆண்டிற்கான கணக்குச் சீட்டுகள் ஆகஸ்டு 2016 ல் பதிவேற்றம் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அலுவலர்களே கணக்குச் சீட்டுகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ள இணையதளத்தில் தேசியத் தகவல் மையம் மூலம் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. 2016-2017 ஆம் ஆண்டிற்கு 150 அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான கணக்குச் சீட்டுகளைத் தொகுத்து, 12.6.2017 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

92. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் / நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / நகராட்சிப் பள்ளிகள் மற்றும்

உள்ளாட்சித் துறை பணியாளர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டப் பணிகள் அரசு தகவல் தொகுப்பு விவர மைய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசுத் தகவல் தொகுப்பு விவர மைய அலுவலகம், பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் குறியீட்டு எண்கள் கீழ்க்கண்ட பணியாளர்களுக்கு வழங்கியுள்ளது:-

| வ.எண். | விவரம் | 31.3.2017 வரையில் வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள் | பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (1.4.2017 முதல் 30.6.2017) வரையில் வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள் |
|---|---|---|---|
| i. | அரசுப் பணியாளர்கள் | 3,41,501 | 7,657 |
| ii. | நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி ஒன்றியப் பள்ளி பணியாளர்கள் | 93,394 | 827 |
| iii. | உள்ளாட்சித் துறை பணியாளர்கள் | 27,432 | 148 |
| | மொத்தம் | 4,62,327 | 8,632 |

93. அரசுப் பணியாளர்கள் / நிதி உதவிப் பெறும் கல்வி நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 2015-2016 வரை 3,84,575 சந்தாதாரர்களுக்குக் கணக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கணக்குச் சீட்டுகள் சம்பந்தப்பட்ட சந்தாதாரர்களே பதிவிறக்கம் செய்து கொள்ள இணையதளத்தில் தேசியத் தகவல் மையம் மூலம் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் 2016-2017 ஆம் ஆண்டிற்கான கணக்குச் சீட்டுகளைத் தொகுக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாதமும் இணையதளம் மூலம் கணக்குகளைச் சரிபார்த்தபின், விடுபட்ட கணக்குகள் தேசியத் தகவல் மையம் மூலம் விடுபட்ட கணக்கிற்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இணையதளம் மூலம் பதிவேற்றப்பட்ட விடுபட்ட கணக்குகளைச் சம்பந்தப்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலகங்களால் பதிவு செய்யப்பட்டு மாவட்டக் கருவூல அலுவலகங்களால் சரிபார்த்தபின் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு

விடுபட்ட கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

## உள்ளாட்சி துறை பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

94. உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் நிலையாக்கப்படாத பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் கணக்கு எண்கள் சம்பந்தப்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்களைக் கொண்டு சரிபார்க்கப்பட்டு ஒத்திசைவு செய்யும் பணிகள் இவ்வலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன. தற்போது மாதந்தோறும் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகையுடன் நிர்வாகப் பங்குத் தொகை மற்றும் செலுத்திய தேதி ஆகிய விவரங்களை இணையதளம் மூலமாகக் கணினியில் பதிவேற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் இணையதளம் மூலம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அப்பதிவுகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலர்களால் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கை முடித்து கணக்குகள்

பெறப்பட்டவுடன் கணக்குச் சீட்டுகளைத் தொகுத்து வழங்க அனைத்து ஆயத்தப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி

95. அரசாணை (நிலை) எண் 108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, 19.4.2010-ல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களின் பொது வருங்கால வைப்பு நிதி பணிகள் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட திட்டத்தில் 30.6.2017 அன்று வரை 1,96,856 சந்தாதாரர்கள் உள்ளனர். அரசாணை (நிலை) எண் 53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20.7.2015-ல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்

திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டப் பணியாளர்களிடமிருந்து ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்புநிதி பிடித்தம் செய்யப்படுகிறது. ஆகஸ்ட் 2015 முதல் பிப்ரவரி 2017 வரை மாவட்டக் கருவூலங்களிலிருந்து பெறப்பட்ட வரவினப் பட்டியல்கள் அனைத்தும் பதிவு செய்யும் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன.



**24.04.2017** அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.D.ஜெயக்குமார் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறை மற்றும் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அரசு தகவல் தொகுப்பு விவர மைய முதன்மைச் செயலாளர்/ஆணையர், திரு. S. கோபாலகிருஷ்ணன்., இ.ஆ.ப., தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறை ஆணையர் (பொ) திரு. P. உமாநாத், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத்துறை

96. அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத்துறை 1969 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை எண் 598, நிதி (உள்ளாட்சி நிதி) துறை, நாள் 3.8.1992-ன்படி நடைமுறையில் இருந்த உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் அரசு வணிகத் திட்டங்கள் துறைகளின் பணிகள் மற்றும் கடமைகள் திருத்தியமைக்கப்பட்டு, இத்துறை அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையாகத் தற்போது செயல்பட்டு வருகிறது. பின்வரும் வாரியங்கள் மற்றும் நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது:-

## சட்டப்படியான நிறுவனங்களின் தணிக்கை

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| (I) | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 2015-2016 |
| (II) | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 2015-2016 |
| (III) | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2015-2016 |
| (IV) | சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 2015-2016 |
| (V) | தமிழ்நாடு வக்ஃபு வாரியம் | 2014-2015 |
| (VI) | தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் | 2015-2016 |

97. மேலே தெரிவிக்கப்பட்டுள்ள சட்டப்படியான வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை (தமிழ்நாடு வக்ஃபு வாரியம், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் நீங்கலாக) உடன் நிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும், சட்டமன்ற பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

## சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் தணிக்கை

98. கீழ்க்கண்ட சட்டவரையறைக்கு உட்படாத நிறுவனங்களின் துறைத் தணிக்கை இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை / நிறுவனங்கள் |
|---|---|---|
| i. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 97,106 |
| ii. | வேளாண்மை விரிவாக்க மையங்கள் | 874 |
| iii. | எடையளவு நிறுவனங்கள் | 316 |
| iv. | ஆண்டிற்கு 0.20 இலட்சம் ரூபாய்க்கு மேல் தொடர் மானியம் மற்றும் 1.20 இலட்சம் ரூபாய்க்கு மேல் தொடரா மானிய உதவிப் பெறும் நிறுவனங்கள் | 687 |

99. இத்துடன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரியம், நாட்டுப்புறக் கலைஞர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம், 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள் மற்றும்

ஏனைய பல்வகை நிறுவனங்களின் தணிக்கைகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## தணிக்கைச் சான்று

100. மானிய உதவிபெறும் நிறுவனங்களுக்கு, மானியத் தகுதிச் சான்று இத்துறையால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்குட்பட்ட வாரியங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதிக் கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கைச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

## ஏனைய பணிகள்

101. தற்போது, அரசின் குறிப்பிட்ட ஆணைகளின்படி 19 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வாளர்கள் நிலையில் உள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட்டு அத்தகைய தணிக்கை தொடர்பான அறிக்கைகள் அரசுக்கு ஆண்டு தோறும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

102. மேலும், கீழ்க்காணும் தணிக்கைப் பணிகள் மற்றும் ஏனைய பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது:-

i. நிகர் நிலை பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப்பணித் திட்டம்

ii. தமிழ்நாடு அரசு மருத்துவ நல நிதித் திட்டம்

iii. குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

iv. மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதி ஆகியவற்றின் கணக்குகளின் தணிக்கை

v. அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் கணக்குகள் தணிக்கை

vi. தலைமைச் செயலக அனைத்துத் துறைகள்

vii. அனைத்துத் துறை அரசுப்பணியாளர்களின் ஊதிய நிர்ணயத் தணிக்கை இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. வணிக வரித்துறை, பதிவுத்துறை, போக்குவரத்துத்துறை ஆகிய துறைகளில் இத்தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மேலும் வேளாண்மைத்துறை, பொதுப்பணித்துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைகளில் இத்தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது

viii. அரசுத் துறையில் பணிபுரியும் அலுவலர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை

## தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

103. அரசுத்துறை நிறுவனங்களின் தணிக்கையின்போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் மாதந்தோறும் தொகுக்கப்பட்டுத் திருத்த நடவடிக்கைக்காக அந்தந்தத் துறைகளின் தலைவர்களுக்கும் அரசு செயலாளர்களின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுத் தணிக்கைத் தடைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள இத்துறையால் வலியுறுத்தப்படுகிறது.

## தணிக்கைக் கட்டணங்கள்

104. சட்டப்படியான வாரியங்களின் தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கைப் பணியாளர்களின் சம்பளச் செலவின அடிப்படையிலும், வக்ஃபு நிறுவனத்தின் நிகர வருவாயில் 1.5 சதவீதமும் தணிக்கைக் கட்டணமாக இத்துறையால் வசூலிக்கப்பட்டு, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

## சிறப்புத் தணிக்கை

105. அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் கல்லூரி ஆசிரியர்களின் பணியமைப்பு தொடர்பான சிறப்புத் தணிக்கையானது இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஊதிய முரண்பாடு களையப்பட்டது, முனைவர் (Ph.D.) பட்டத்திற்கு ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கப்பட்டது மற்றும் பணி மேம்பாட்டு ஊதியம் வழங்கப்பட்டது தொடர்பாகப் பணிப்பதிவேடுகள் தணிக்கை செய்யப்பட்டன. இப்பொருள் தொடர்பான தணிக்கை அறிக்கை அரசு உயர் கல்வித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

106. தனியார் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை குறித்த சிறப்புத் தணிக்கை மேற்கொள்ள அரசால் அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தனியார் கல்லூரிகளில் 2011-2012, 2012-2013, 2013-2014 மற்றும் 2014-2015 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை மீதான தணிக்கை

மேற்கொள்ளப்பட்டு அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் செயல்படுத்தப்படும் கல்வி உதவித் தொகை திட்டத்தினை இத்துறையால் ஆண்டுதோறும் தொடர்ந்து தணிக்கை மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 135, நிதி (உள்ளாட்சி நிதி) துறை, நாள் 23.5.2017-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**D.ஜெயக்குமார்**
மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்